முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ஜெகநாதர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

16.04.2019, செவ்வாய்க்கிழமை

1. **தரும பலத்தின் வழி உலகினை**
**தனிப்பெருஞ் சக்தியாக மாற்ற**
**ஆறுமுக அரங்க மகானாக வந்த**
**அண்ணலே ஞான தேசிகா**
2. தேசிகா உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் நித்ய பிரசன்ன ஆசி
ஆசிபட **ஜெகநாதர் யானும்**
**அருளுவேன் விகாரி தகர் திங்களில்**
3. **திங்களிலே சூலதிகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் சித்திரை மாதம் 3ம் நாள் 16.04.2019, செவ்வாய்க்கிழமை)**
**தேசிகனார் மார்க்கம் உலகமறிய**
**ஓங்காரக்குடில் பெருமையறிய உரைப்பேன்**
**ஓம் என்ற சக்திதனை அருளும்**
4. அருளும் ஆறுமுக அரங்க ஞானி
அறமெனும் ஞான வழிகளை
பேருலகே ஏற்றுத் தொடர்ந்து வர
பேராசை துன்பம் வழி உலக மக்கள்
5. மக்கள் உழன்று மடியாத
மகத்துவமான தெளிவு திடமும்
தேக்கமிலா சிறப்பறிவும் கூடி
திருவருளாக குருவருளை ஏற்று
6. ஏற்று கடைத்தேறுவர் மாறுவர்
எதிர்மறையாக கலியுகம் தன்னில்
பற்று கொண்டு பொய் ஆன்மீகம்
பகட்டான ஆசிரமம் நடை உடையென
7. உடையென பொருளாசை கொண்டு
உயர்விலா ஞானம் நடத்துபவர்கள்
சோடை போகா அரங்கன் உண்மைநெறி
சுத்தநெறியை ஏற்க கற்கவே
8. கற்கவே தெளிவு திடமும்
காசுக்கு விற்கும் ஞானமில்லா
ஏற்பு கொண்டு மக்கள் வளமும்
எளிமையான வாழ்வு நெறிக்கு வந்து

9. வந்துமே மெய்யன்பராக குருவாக
வள்ளல் மார்க்க ஞானவான்களாக
சிந்தை தெளிவு பெற்றுமே
சித்தர்கள் துணைபட வாழ்வர்

10. வாழ்வர் உண்மை ஆன்மீகவாதியாக
வல்லமையான குருமார்களாக மாறி
ஊழ்வெல்லும் சக்தி கூடியே
உலகில் அரங்க ஞானி வந்த நோக்கம்

11. நோக்கம் நிறைவேறும்படி சேவையை
நிறைவேற்றி கலியுகமே மாற்றம்
தேக்கமிலா பெற்று ஞானயுகமாகும்
தெரிவித்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் ஜெகநாதர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

தருமபலத்தின் துணையால் தருமநெறி மூலமாக இவ்வுலகினை தனிப்பெரும்சக்தி வடிவமாக மாற்றி தர்ம உலகமாக ஞான உலகமாக ஆக்கிடவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட அண்ணலே மகா ஞான தவசியே ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் சித்திரை மாதம் 3ம் நாள் 16.04.2019, செவ்வாய்க்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே ஜெகநாதர் யானும் அரங்கமகா தேசிகனாரின் தூயநெறியினை உலகமெலாம் அறிந்திடவே ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலின் பெருமைகளை உலகறியக் கூறுகிறார் என்கிறார் மகான் ஜெகநாதர்.

ஓங்காரமாகிய பிரணவ சக்தியை முருகப்பெருமானின் ஆற்றலை அருளுகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிகனார் வகுத்திட்ட அறம் எனும் தர்மத்தின் ஞானவழிகளை இவ்வுலக மக்கள் எல்லாம் மனமார நம்பிக்கையோடு ஏற்றுக் கொண்டு தானதருமங்களைச் செய்து ஞானவழிகளிலே கடைப்பிடித்து வாழ்ந்து வர, உலக மக்களெல்லாம் பிறவித் துன்பத்தை தருகின்ற பேராசை எனும் துன்பத்தின் வழி செல்லாமல் மீண்டு வந்து மரணமிலாத பெருவாழ்வை அறிந்து அதை அடையும் தெளிவான சிந்தையும் உறுதியும் உண்டாகும்.

மக்களுக்கு தெளிவும் திடமும் உண்டாகி மரணமிலாப் பெருவாழ்வை அடைகின்ற சிறப்பறிவும் பெருகி திருவருளாக குருவருள் அவர்களுக்கு கிடைத்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்வார்கள்.

உண்மை ஞானவழியிலும் தர்மத்தின் பாதையிலும் செல்லாமல் எதிர்மறையான சிந்தனைகளோடு கலியுக மாயையுள் அகப்பட்டு பொருள் பற்று கொண்டு போலி ஆன்மீகத்தை கடைப்பிடித்தும் போலி ஆன்மீகத்தை பரப்பியும் பகட்டான ஆசிரமத்தினை அமைத்தும் கபடவேடம் அணிந்து தவசிகள் போல் உடை தரித்து, பெரும் தவசிபோல் நடை உடை பாவனைகளை போலியாக செய்தும் பொருளாசையின் மாயையுள் உழன்று மக்களைத் துன்பத்திற்கு உள்ளாக்கி நரகத்தில் வீழ்த்தவல்ல போலி ஞானத்தை போதித்து மக்களை வீணாக்கி பாவியாகிக் கொண்டிருப்பவர்கள் எல்லாம் இனியும் பாவியாகாமல் எடுத்த மானிடப்பிறப்பை வீணாக்காமல் குற்றமற்றவர்களாக ஆகிட வேண்டுமாயின் உண்மை ஞானநெறியாகிய அரங்கன் கூறும் தூய ஞானநெறிக்கு வந்து அரங்கன் கூறும் தூயநெறியினை ஏற்று கற்று பின்பற்றிட வேண்டும்.

அரங்கனின் தூயநெறியினை அவர்களெல்லாம் கடைப்பிடித்திட அவர்களுக்குள் உள்ள மாயை விலகி அறிவில் தெளிவும் மனோதிடமும் உண்டாகி ஞானத்தை காசிற்காக பொய் கூறி விற்கும், தீயநெறியினின்று விலகி மக்கள் நலனை கருத்தில் கொண்டு பொதுநலமாய் செயல்பட்டு எளிமை வாழ்வை மேற்கொண்டு உண்மை ஞானம் உணர்ந்து மெய்யன்பராக ஆகி குருவாய் ஞானிகளை ஏற்று வள்ளல் மார்க்கம் தனை ஏற்று கடைப்பிடித்து ஞானவான்களாக சிந்தையில் தெளிவு பெற்று, சித்தர்களின் துணைபட பாவச்சுமைகள் குறைந்து வாழ்வார்கள்.

அரங்கனின் தூய ஞான நெறியில் தொடர்ந்து வரவர, அவர்களது போலியான வேடம் நீக்கி உண்மையான ஆன்மீகவாதிகளாக மாறி வல்லமையான குருமார்களாக மாறி அவர்களது பாவவினைகளை ஊழ்வினைகளை வெல்லும் சக்தி பெருகி அரங்கனுக்கு துணையாக ஆகி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அவதார நோக்கம் நிறைவேறும் வகையிலே தொண்டுகளை செய்து அவதார நோக்கத்தினை நிறைவேற்றிடுவார்கள். இந்த கலியுகமே தர்மத்தின் வழி சென்று தடையின்றி கலியுகம் மாறி ஞானயுகமாக ஆகிடும் எனக் கூறுகிறார் மகான் ஜெகநாதர்.

–சுபம்–